


நாகர்கோவில் மாநகராட்சி, வலம்புரிவிளை குப்பை சேகரிக்கும் மையம் மற்றும் வேப்பமூடு முக்கோண பூங்காவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கள ஆய்வு செய்தார்.

## நாளை (14ம்தேதி) சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும்

# துணை முதலமைச்சருக்கு மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!



சிவகங்கை, நவ.13 -

நாளை 14, 15 ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சருக்கு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் சிறப்பான முறையில் உற்சாகமான வரவேற்பு தரப்பட உள்ளது. 14, 15 ஆகிய தேதிகளில் கழக தலைவர் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறும் வகையில் மாவட்ட ம் தோறும்கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டத்திற்கு வருகைதருகிறார்.

நாளை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை காரைக்குடியில் காலையில் குழந்தைகள் தின விழாவிலும், பள்ளி மாணவ மாணவிகளுக்கு அரசின் சார்பில் விலையில்லா மிதிவண்டி களை வழங்கிபேருரை ஆற்றுகிறார். மாலையில் சுயமரியாதை இயக்கத் தலைவர் ராமசுப்பையாவின் 118வது பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில் பங்கேற்று விழா புகழஞ்சலி செலுத்துகிறார்.

15ஆம் தேதி சனிகிழமை காலை திருப்பத்தூர் தொகுதி சிங்கம்புணரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேரூராட்சி மன்ற அலுவலகத்தினை திறந்து வைத்தும், புதுப்பிக்கப்பட்டஅண்ணா மன்றத்தை திறந்து வைத்தும், முத்தமிழறிஞர் கலைஞர், முன்னாள் அமைச்சர் செ.மாதவன் ஆகியோரது திரு உருவச்சிலையினை திறந்து வைத்து விழா பேருரை ஆற்றுகிறார்.

அதனை தொடர்ந்து கிருங்கா கோட்டையில் சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் மார்பளவு வெண்கல சிலையை திறந்து வைக்கிறார். மாலை 4 மணி அளவில் சிங்கம்புணரியில் பாரி வள்ளல் மேல்நிலைப்பள்ளியில் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் சிலையை திறந்து வைக்கிறார். அரசின் சார்பில் 5000 பேர்களுக்கு பல்வேறு துறைகளில் சார்பில் நலத்திட்ட உதவிகளைவழங்கி விழாப் பேருரை ஆற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சிகளில் வருகை தரும் துணை முதலமைச்சரை வரவேற்பதற்காக சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், கழக மாவட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வருகை தந்து இரண்டு நாட்கள் நிகழ்ச்சியினை சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் வருகையினை முன்னிட்டு மாவட்ட எல்லையான நேமத்தான் பட்டியலிருந்து இருந்து காரைக்குடி வரையிலும் காரைக்குடியில் இருந்து கோவிலூர்,குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, திருப்பத்தூர், சிங்கம்புணரி வரை சாலையின் இரு புறமும் இரு வண்ண கழக கொடிகள் வண்ண குழல்விளக்குகள் சுமார் 200 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே வரவேற்பு அலங்கார ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான வரவேற்பு ஏற்பாடுகளை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் மாவட்ட ஒன்றிய பேரும் நகர் கழக நிர்வாகிகள் செய்துள்ளார்கள். துணை முதல்வரின் வருகையை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் விழாக்கோலமாக காணப்படுகிறது.

## சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் (எஸ்.ஐ.ஆர்.) சீராய்வைக் கண்டித்து

# ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட இந்தியா கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

### வே.ஜெயபாலன் - ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் 1000 பேர் பங்கேற்பு!

தென்காசி.நவ.13

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் (SIR) சீராய்வை தேர்தல் ஆணையம் கைவிடக்கோரியும்,ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பவையாக மாறி எதேச்சதிகாரப் போக்குடன் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் (SIR) செயல்படு த்துவதை கண்டித்தும்,இந்தியா கூட்டணி சார்பில் தென்காசி ஒருங்கிணைந்த மாவட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் சுமார் 1000,ம் பேர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், மாவட்ட காங்கிரஸ் தலைவர் பழனிநாடார் எம்.எல்.ஏ.சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ ம.தி.மு.க துணை பொது செயலாளர் ராஜேந்திரன்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செய்யது பட்டாணி, சி.பி.எம். உச்சி மாகாளி, சி.பி.ஐ. இசக்கி துரை,வி.சி.க. பண்பொழி செல்வம், மக்கள் நீதி மையம் செல்லப்பா,ம.ம.க. நயினார் முஹம்மது,

ம.ஜ.க. யாகூப்,ஆதிதமிழர் பேரவை கலிவருணன்,முன்னாள் தென்காசி வடக்கு மாவட்ட பொறுப்பாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லதுரை, மாவட்ட அவை தலைவர்கள் சுந்தரமகாலிங்கம், சுப்பையா,மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல் காதர், மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் முத்துச்செல்வி தொகுதி பார்வையாளர் கலைக்கதிரவன்,மாநில மருத்துவ அணி துணை செயலாளர் செண்பக விநாயகம்,மாவட்ட துணைச் செயலாளர்கள் கனிமொழி, கென்னடி,ராஜதுரை,புனிதா,மனோகரன், பொருளாளர்கள் ஷெரிப், சரவணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, பரமகுரு, முத்துப்பாண்டி, ஆறுமுக சாமி, சேசுராஜன்,ஷேக் தாவுது,

பொதுக்குழு உறுப்பினர்கள் இராஜேஸ்வரன்,சாமிதுரை,ரஹீம், தமிழ்ச்செல்வி, வேல்சாமி பாண்டியன், தேவதாஸ்,சாகுல் ஹமீது, மகேஸ்வரி, பராசக்தி,மாரிசாமி, ஒன்றிய செயலாளர் கள் அழகுசுந்தரம், அன்பழகன், திவான் ஒலி, ரவிசங்கர், சுரேஷ், சீனித்துரை, சேக் முகமது, ஜெயா, ரமேஷ், மணிகண்டன், லாலா சங்கர பாண்டியன்,கடற்கரை பொன் முத்தையாபாண்டியன், சேர்மதுரை பால்ராஜ், ராமச்சந்திரன்,கிறிஸ்டோபர், பெரியதுரை,வெள்ளத்துரை,அன்பரசு, குணசேகரன்,நகர செயலாளர்கள் சாதிர்,

வெங்கடேசன், கணேசன்,அப்பாஸ்,பீரப்பா, பிரகாஷ், அந்தோணிசாமி, நாகூர் கனி, பேரூர் செயலாளர்கள் குட்டி, முத்தையா, சுடலை,பண்டாரம், கேடிசிகுருசாமி,ரூபி பாலசுப்பிரமணியன்,மாரிமுத்து, சேது சுப்பிர மணியன், அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, முருகன், தங்கராஜ் பாண்டியன், கோமதிநாயகம்,இஞ்சி இஸ்மாயில்,பிச்சையா, உதயகுமார், முகேஷ், அழகு தமிழ்சங்கர்,பசுபதி பாண்டியன், கழக பேச்சாளர் கடையநல்லூர் இஸ்மாயில், ஒன்றியக்குழு தலைவர் ஷேக்அப்துல்லா (தென்காசி) நகர் மன்றத் தலைவர்கள் மூப்பன் ஹபீபுர் ரகுமான் (கடையநல்லூர்)

விஜயா (புளியங்குடி) கௌசல்யா (சங்கரன்கோவில்) மற்றும் கழக நிர்வாகிகள் கே.என்.எல்.சுப்பையா சண்முகநாதன்,ஐவேந்திரன் தினேஷ், ராமராஜ்,பிரேம், முத்து,சுரேஷ், பெருமாள், துரை,வேல்சாமி கருப்பண்ணன்,காசிதர்மம் துரை, ராமையா, வழக்கறிஞர் முத்துராமலிங்கம்,செண்பக குற்றாலம், சரவணகுமார், சங்கர்,விஜயகுமார்,ரமேஷ், ஜெயக்குமார்,சிவசங்கரநாராயணன், வெங்கடேஷ் உள்பட கழகத்தினர் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்பட சுமார் 1000 பேர் பங்கேற்றனர்.

## நாகர்கோவில் மாநகராட்சி, வலம்புரிவிளை

# குப்பை சேகரிக்கும் மையம் - வேப்பமூடு முக்கோண பூங்காவில் கள ஆய்வு!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் நேரில் மேற்கொண்டார்!

நாகரிகோவில், நவ.13-

நாகர்கோவில் மாநகராட்சி, வலம்புரிவிளை குப்பை சேகரிக்கும் மையம் மற்றும் வேப்பமூடு முக்கோண பூங்காவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கள ஆய்வு செய்தார்!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் அவர்கள் 12.11.2025, புதன் கிழமை அன்று காலை நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வலம்புரி விளை குப்பை சேகரிக்கும் மையம், வேப்பமூடு முக்கோண பூங்கா ஆகிய பகுதிகளில் மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வில் வலம்புரிவிளை குப்பை கிடங்கில் மனிதக் கழிவுகள் சுத்திகரிப்பு நிலையம் முறையாக செயல்படாமல் உள்ளது.

இதனை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து மனிதக் கழிவு சுத்திகரிப்பு நிலையத்தை முறையாக செயல்படுத்த அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். இதனை தொடர்ந்து, வலம்புரிவிளை குப்பை கிடங்கில் குப்பைகள் கொண்டு செல்வதற்கு போதிய சாலை வசதி இல்லாததால் வாகனங்கள் சீராக செல்ல சாலை வசதி அமைக்க வேண்டி அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் செட்டிகுளம் டிப்போ முன்பு உள்ள சாலை குண்டும் குழியுமாக மோசமான நிலையில் காணப்பட்டது. அதை உடனடியாக சீரமைக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து, வேப்பமூடு முக்கோண பூங்காவையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அந்த பூங்காவை புனரமைக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

ஆய்வில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா உதவி செயற் பொறியாளர் ரகுராமன், உதவி பொறியாளர் சுஜின், மண்டல தலைவர் இ. ஜவகர், இளநிலை பொறியாளர் திருமதி. ஷாலினி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. விஜிலா ஜஸ்டஸ், திருமதி. அனிலா சுகுமாரன், துப்புரவு அலுவலர் பகவதிபெருமாள், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.நாகர் கோவில் மாநகராட்சி வலம்புரி விளை

குப்பை சேகரிக்குப்பை மையம் - வேப்பமூடு முக்கோண பூங்காவில் கள ஆய்வு.

மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் நேரில் மேற்கொண்டார்.





கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை விராட்டிபத்தில் நடைபெற்ற மாநில அளவிலான டர்ப் கிரிக்கெட் போட்டிகளை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து வெற்றி பெற்ற அணிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பரிசுகள் வழங்கி பாராட்டினார். மதுரை மாநகர் திமுக முன்னாள் மாமன்ற உறுப்பினர் குடைவீடு அருண்குமார் ஏற்பாட்டில் இரண்டு நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகளில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 38 அணிகள் பங்கேற்றனர். மேலும் இந்நிகழ்ச்சிகளில் தத்தனேரி பகுதி செயலாளர் நீலமேகம், கழக நிர்வாகிகள் பாக்கியராஜ் என்ற ராஜேஷ், மகேந்திரன், ஜெகன், இந்திரஜித், கோபி சங்கர் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

## சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சிவகங்கை, நவ.13-

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில்நடைபெற்றது. மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்று பேசினார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது. கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் தளபதி அவர்களின் பொற்கால ஆட்சியின் சாதனைகளை தமிழகம்முழுவதும் மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்று கழகத் தொண்டர்களை உற்சாகப் படுத்தி வரும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு 14, 15 தேதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அரசு மற்றும் பல்வேறு கட்சிநிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இதற்காக இன்று வியாழக்கிழமை 13ஆம் தேதி இரவு அவர் காரைக்குடிக்கு திருச்சி யிலிருந்து கார் மூலம் வருகைதருகிறார். . நாளை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழாவிலும் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியினை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். அதனைத் தொடர்ந்து மாலை 6 மணி அளவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பி .எல். சி. டி.அரங்கில்

சுயமரியாதை இயக்க வீரர் இராம சுப்பையாவின் 118 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றுகிறார் அன்று இரவு காரைக்குடியில் காரைக்குடியில் தங்குகிறார். மறுநாள் 15ஆம் தேதி சனிக்கிழமை காலை 9 மணி அளவில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி சிங்கம்புணரி பேரூராட்சி அலுவலகத்திற்கு புதிதா க கட்டப்பட்டுள்ள பேரூராட்சி அலுவலக கட்டிடத்தை திறந்து வைக்கிறார் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் செ. மாதவன் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு முன்பாக அண்ணா மன்றம்கட்டப்பட்டது. அந்த மன்றம் தற்போது இரண்டு மாடி கட்டிடமாக புதுப்பிக்கப்பட்டடுள்ள அண்ணா மன்றத்தை திறந்து வைத்தும்.அண்ணா மன்றத்தின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் முன்னாள் அமைச்சர் செ. மாதவன்ஆகியோர் திருஉருவச் சிலைகள திறந்து வருகிறார். அதனை தொடர்ந்து 11:00 மணி அளவில் எஸ்.எஸ் தென்னரசு திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினராக இருந்த பொழுது கிருங்காக்கோட்டையில் பெரியார் வைகை அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அதற்காக அங்கு சிறிய அணைக்கட்டு கட்டப்பட்டது. அதற்காக கிருங்காகோட்டை கிராம மக்கள் எஸ் எஸ்.தென்னரசுவிற்கு பெருமை சேர்க்கும் வகையில் சிமிண்டிலான திருவுருவச்சிலையை அமைத்தார்கள்.அந்த சிலை தற்போது மார்பளவு வெண்கலச் சிலையாக மாற்றப்பட்டுள்ளது. சிறுகதை மன்னன் எஸ்.எஸ்தென்னரசு திருவுருவச் சிலையினை துணை முதலமைச்சர் திறந்து வைக்கிறார். அதை தொடர்ந்து மாலை 4 மணி அளவில் சிங்கம்புணரி பாரி வள்ளல் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சர் செ. மாதவனின் முழு உருவச் சிலையினை திறந்து வைக்கிறார். அதை தொடர்ந்து 5000க்கு மேற்பட்டவர்களுக்கு பல்வேறு வகையிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரை ஆற்றுகிறார் . மேலும் சென்னையில் சில தினங்களுக்கு முன் மரணம் அடைந்த கழகத்தின் மூத்த முன்னோடி ஒப்பிலான் பட்டி ஓ.பி.டி சொக்கலிங்கம் அவர்களின் திரு உருவப்படத்தினை படத்தினை திறந்து வைத்து புகழாரம் சூட்டுகிறார். இந்த நிகழ்ச்சிகளில் சிவகங்கை மாவட்டத்தின் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூக்கழக நிர்வாகிகள் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கின்றேன். கழகத் தலைவர் தளபதி, துணை முதல்வர் சிவகங்கை மாவட்டத்திற்கு வரும் பொழுதெல்லாம் எழுச்சியான உற்சாகமாக வரவேற்பு அளித்து வருகிறோம். அதேபோல் 14, 15 , ஆகிய தேதிகளில்நமது மாவட்டத்திற்கு வருகைதரும் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு அயராது பணியாற்றிவரும் துணை முதல்வரை அனைவரும் ஒன்று சேர்ந்து சிறப்பான முறையில் வரவேற்றும், இந்த இரண்டு நாட்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பேசினார். கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி குமார். எம்.எல்.ஏ. மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ருசோ , முன்னாள் எம்.எல்ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி , நகர் கழக செயலாளர் கள் சி.எம். துரை.ஆனந்த், க.பொன்னுச்சாமி , பெரி.பாலா , காரைக்குடி மாநகர செயலாளர் நா.குணசேகரன் காரைக்குடி மாநகர மேயர் செயற்குழு உறுப்பினர் எஸ். முத்து துரை. பொதுக்குழு உறுப்பினர்கள்கரு. அசோகன், பள்ளத்தூர் கே .எஸ். ரவி, ஜெ.மதார் சேட், பி. ஆர். பெருமாள் , அம்பலமுத்து,

ஏஆர். ஜெயமூர்த்தி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம் ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், மா.அண்ணா துரை, துரை.ராஜா மணி, அ.முத்துச்சாமி,எம்.ஏ கடம்பசாமி, சுப்பிரமணியன், ஆறு. செல்வராஜன், கா. வெங்கட்ராமன், வே.தமிழ்மாறன், யோகா கிருஷ்ண குமார், வே. ஆரோக்கி யசாமி, ஆர்.எம். கென்னடி, லெ.மு .ரவிச்சந்திரன், வே பூபாலசிங்கம் ,சுப. சின்ன துரை, கே .எஸ். ஆன குன்னக்குடி சுப்பிரமணியன் ,நா. நெடுஞ்செழியன், விராமதி மாணிக்கம், எஸ். சண்முக வடிவேல், பி. செல்வராஜ், பூமணி, கே. பால சுப்பிர மணியன், பேரூர் கழகச் செயலாளர்கள் பி.ஏ.நஜ்முதீன், நாகூர் கனி, அசோக், பிரம்மையா, ஜெயராமன், பகுருதீன் அலி, மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார், துணை அமைப்பாளர்கள் கே.எம். பொற்கோ, பரணிகிட்டு, மாவட்ட சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் மாவட்டமகளீரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணிஅமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் ,மகளிரணி நிர்வாகிகள் மார்க் ரெட்கமலா, திலகவதி கண்ணன், பாக்கியலட்சுமி விஜயக்குமார் ,மஞ்சுளா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, ஒன்றிய துணைச் செயலாளர்கள் எஸ் .முத்துக்குமார், சிவபுரிசேகர், ஜெயகுமார் மானா மதுரை நகர் மன்ற துணை தலைவர் பாலா சுந்தர், மாணவரணி கார்த்தி, மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். நகர் கழகச் செயலாளர்சி.எம்.துரை. ஆனந்த் நன்றி கூறினார். கூட்டத்தில் முதல் நகர்மன்றத் தலைவர் சொ.லெ. சாத்தையா, ஒப்பிலான்பட்டி சொக்கலிங்கம் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் தேவதாஸ் மற்றும் ஆகியோர் மறைவிற்கு இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட முருகபெருமாள் அவருக்குப் பதிலாக, மாவட்ட துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட **எ.அருள்வின் ரொட்ரிகோ,** (18ஏ, பரதவர் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி) அவர்கள் திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எம். செந்தில்குமார், வி.ராம்சங்கர் ஆகியோருக்கு பதிலாக,

**அ.முகமது அலி,** மானூர், திருநெல்வேலி

**எஸ்.மகாராஜன்,** 23, பாகவதர் தெரு, மேலக்கருங்குளம், மேலப்பாளையம். திருநெல்வேலி.

**எம். கண்ணன்,** 62, வலம்புரி அம்மன் கோவில் தெரு, திருநெல்வேலி டவுன்.

ஆகியோர் திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறியாளர் அணிதுணை அமைப்பாளர்களாகவும்நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11-11-2025.

கு. கருணாநிதி
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி



புதூர் ஊராட்சி ஒன்றியம், பூதலப்புரம் ஊராட்சி, சின்னையாபுரம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.19.04லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.நிகழ்வில் புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் செல்லப்பாண்டி, மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம், கிளைச் செயலாளர்கள் முருகன், முத்துராஜ், மற்றும் கிராம பொது மக்கள் கலந்து கொண்டனர்.